செ.வெ.எண்:23/மே நாள்: 11.05.2015

# செய்திக்குறிப்பு

இராமநாதபுரம் மாவட்டத்தில் 2016-ஆம் ஆண்டு சட்டமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு இராமநாதபுரம், திருவாடானை, பரமக்குடி மற்றும் முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதிகளுக்கு ஏற்கனவே கீழ்கண்டவாறு பணி ஒதுக்கீடு செய்து ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் தலா மூன்று குழுக்கள் வீதம் வீடியோ கண்காணிப்புக்குழு, பறக்கும் படை, நிலையான கண்காணிப்புக் குழுக்கள் என மூன்று குழுக்கள் கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. திருவாடானை சட்டமன்றத் தொகுதி பணப்பரிமாற்றம் தொடர்பான பதற்றமான (Sensitive) தொகுதி என தேர்தல் ஆணையத்தால் தற்போது இனம் காணப்பட்டுள்ளது. அதனால், அத்தொகுதிக்கு மட்டும் கூடுதலாக ஒரு சிறப்பு பறக்கும்படை நியமனம் செய்யப்பட்டு, ஏனைய அனைத்து கண்காணிப்புக் குழுக்களுக்கும் மத்திய அரசு துணை இராணுவப் படை வீரர்கள் கண்காணிப்புப்பணியில் ஈடுபடுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

தற்போது ஏற்கனவே இத்தேர்தல் பணியின் பொருட்டு 119 மண்டல அலுவலர்கள் குழு நியமனம் செய்யப்பட்டுள்ளது. தலைமைத் தேர்தல் அலுவலரின் அறிவுரையின்படி மண்டல அலுவலர் குழுக்கள் 11.05.2016 முதல் 14.05.2016 வரை சிறப்பு பறக்கும் படையினராக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

நான்கு சட்டமன்ற தொகுதிகளான பரமக்குடி, திருவாடானை, இராமநாதபுரம், முதுகுளத்தூர் ஆகிய தொகுதிகளில் ஒவ்வொரு தொகுதிக்கும் 3 பறக்கும் படை வீதம் குழுக்கள் அமைக்கப்பட்டு மத்திய துணை ராணுவ படைகள் மூலம் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்ற தகவலை இராமநாதபுரம் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**